**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| | | | |
|---|---|---|---|
| 2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் 4-ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு 1-ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி உதவியாளர் திரு.சுவர்ணரத்தினக்குமார் என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | குருசாமி | தொழில் : | |
| த.பெ: | | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**4.1.2024 OS No. 9/2023 வா.சா.1** குருசாமி **ஆஜர்**
**முதல் விசாரணை :**

1. நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ஆம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்கு மூலத்தில் உள்ள விவரங்களை படித்து காண்பித்து பின்பு நான் அதில் கையெழுத்து செய்துள்ளேன். பிராமண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். என் அப்பா பெயரிலுள்ள பட்டா பாஸ் புத்தகம் அசல் தாக்கல் செய்கிறேன்.( **பட்டா பாஸ் புத்தகம் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது )** என் அப்பாவின் வாரிசு சான்றிதழ் இணையவழி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன்.( **வாரிசு சான்றிழ் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**2.** 1ஆம் பிரதிவாதி பெயரிலுள்ள கணினி பட்டா தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 1ஆம் பிரதிவாதி தாயார் பெயரிலுள்ள கணினி பட்டா தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** சிவகங்கை மாவட்ட வருவாய் அலுவலரின் 25.11.2022 தேதியிட்ட செயலாணை சார்பு நகல் தாக்கல் செய்கிறேன். **(மாவட்ட வருவாய் அலுவலரின் செயலாணை வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam.